நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : உயர்நிலை

## Level : Advanced

***November 2009***

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யவும்.**

## "தமிழ் மரபு அறக்கட்டளை" சுபா உடன் இ-நேர்காணல்

தமிழ் மரபு அறக்கட்டளை என்ற அமைப்பு, இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பதிவு பெற்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம். இதன் நிறுவனர்கள் மூவர். மூவரும் கொரியா (முனைவர் நா.கண்ணன்), ஜெர்மனி (சுபாஷினி டிரெம்மல்), சுவிட்சர்லாந்து (முனைவர்.கு.கல்யாணசுந்தரம்) என வெவ்வேறு நாடுகளில் இருக்கின்றனர். இந்த அமைப்பானது, ஓலைச் சுவடிகள், பழமை வாய்ந்த நூல்கள் ஆகியவற்றை மின்னூல்களாக வெளியிடுகிறது மரபுச் செழுமையை உணர்த்தும் இயல், இசை ஆகியவற்றின் ஒலி - ஒளிப் பதிவுகளை இணையத்தில் சேமிக்கிறது. மின் தமிழ் என்ற இணையக் குழுமத்தில் தமிழ் மின்பதிப்புகள் தொடர்பான விவாதங்களை வளர்க்கிறது. இந்த அமைப்பின் நிறுவனர்களுள் ஒருவரான சுபாஷினி, ஜெர்மனியில் வசிக்கிறார். H P நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப நிபுணராகப் பணிபுரியும் அவருடன் சென்னை ஆன்லைன் தமிழ்த் தளத்தின் ஆசிரியர் அண்ணாகண்ணன், இணையம் மூலம் மின் அரட்டை வழி உரையாடினார். அப்பொழுது இந்த அமைப்பின் பணிகள் குறித்துப் பல செய்திகளை சுபாஷினி பகிர்ந்துகொண்டார். அந்த உரையாடலின் தொகுப்பு இதோ! நன்றி: Chennai Online.

2001ஆம் ஆண்டு போப்லிங்கன் ஜெர்மனியில் தொடங்கப்பட்ட இந்த அறக்கட்டளை, தமிழில் இன்னமும் பதிப்பிக்கப்படாத, அப்படியே பதிப்பிக்கப்பட்டிருந்தாலும் அழிந்து விடும் நிலையிலும் உள்ள தமிழ் நூல்களை நிரந்தரமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

பனை ஓலைகளில் எழுதப்பட்டு வழி வழியாக குடும்பச் சொத்தாகப் பாதுகாக்கப்பட்டு இன்னமும் பதிப்பிக்கப்படாத ஒலை சுவடிகளில் ஏறக்குறைய அறுபது விழுக்காடு மருத்துவத் துறை சார்ந்தவை. அவற்றில் பல இன்னும் அச்சிற்கு வரவில்லை என்பது உண்மை. இது தவிர, வான சாஸ்திரம், கணிதம், நாவாய் சாஸ்திரம், இரசவாதம், கோயில் கட்டுமான சாஸ்திரம், மாட்டு வைத்தியம், இலக்கியம், யோக சாஸ்திரங்கள் போன்ற பல துறை நூல்கள் பதிப்பிக்கப்படாமல், அல்லது மிக, மிக மெதுவாகப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் கணினி தொழில்நுட்பத்தைக் கொண்டு மிக எளிமையாகப் பனை ஓலையில் எழுதப்பட்ட நூல்கள், மற்றும் ஆவணங்கள், பழம் நூல்களை மிகச் சிறப்பாக மின்னாக்கம் செய்து வைக்கலாம். தமிழ் நாட்டில் தனியார் முயற்சிகள் மற்றும் தமிழ் மரபு அறக்கட்டளை போன்ற நிறுவனங்கள் செய்கின்ற முயற்சிகளை விட ஏனையோரின் பங்கு குறைவாகவே உள்ளன. இது மாற வேண்டும்.

குறிப்பாகக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகத் தமிழ்த் துறை போன்றவை மின்னாக்கப் பணிகளில் ஈடுபாடு காட்ட வேண்டும். தமிழக அரசாங்கமும் இவ்வகைப் பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் நூலகங்களுக்குச் சென்று அங்கு எவ்வகையில் பழம் நூல்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்படுகின்றன என்று நான் பார்த்திருக்கின்றேன். பல தரப்பட்ட நூல்கள், நாடுகளின் வரைபடங்கள், கடிதங்கள், செய்தி அறிக்கைகள், வரலாற்று ஆவணங்கள், புகைப்படங்கள் எனப் பல்வேறு வகைப்பட்டவை அஉைசழகடைஅ எனப்படும் நுண்படச்சுருள் ஆகத் தயாரிக்கப்பட்டு, அல்லது ஸ்கேனிங் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அண்மையில் ஜெர்மனியில் உள்ள ஒரு நூலகத்தில் நடைபெற்ற கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு 800ஆம் ஆண்டு முதல் தேடிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்களைப் பார்த்த போது இந்தப் பெருமைப்படத்தக்க விஷயத்தை நினைத்து வியந்தேன்.

அண்மையில் ஜெர்மனியில் கோலேன் நகரில் இடிந்து விழுந்த நகர ஆவண நிலையத்தைப் பற்றிய செய்திகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த ஆவணங்கள் வேறோர் ஆவணப் பாதுகாப்பு நிலையத்தில் மின்பதிப்புகளாக வைக்கப்பட்டுள்ளன. அசல் அழிந்த போதும் அதன் மின்பதிப்பு பாதுக்காக்கப்பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பெரிய ஒரு காரியம்!

இந்த ஓலைச் சுவடி பாதுகாப்பு முறையை நாங்கள் 5 படி நிலைகளாக வகுத்திருக்கின்றோம்.

1. ஓலைச் சுவடிகளைத் தேடி எடுப்பது.

2. அவற்றை இனம் பிரிப்பது, அதாவது categorisation என்பது. மருத்துவமா, வான சாஸ்திரமா, ஓவியமா, கலையா, இலக்கியமா என வகை பிரிப்பது.

3. அடுத்து மின்பதிப்பாக்கம். ஸ்கேனிங் முறையில் இதனை மின்பதிப்பாக்கம் செய்து இணையத்தில் வைப்பது.

4. இந்த மின்பதிப்பு செய்யப்பட்ட ஓலைகளை, ஓலைச் சுவடி வாசிக்கத் தெரிந்த அறிஞர்களைக் கொண்டு வாசிக்க வைத்து, அதனை ஒலிப்பதிவு செய்வது, மற்றும் எழுத்துகளைத் தட்டச்சு செய்வது.

5. இந்த ஒலிப் பதிவுகளையும், தட்டச்சு செய்யபப்பட்ட நூலையும் மின்பதிப்பாக்கம் செய்து நிரந்தரப்படுத்துவது.

ஆக, இந்த ஐந்து படி நிலைகளில் ஒரு ஓலைச் சுவடியின் மின்பதிப்பாக்கத்தைச் செயல்படுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. இதில் மிக முக்கியமான ஒன்றாக நாம் நினைப்பது முதலில் எவ்வளவு ஓலைகள் கவனிப்பாரற்று இருக்கின்றனவோ, அவற்றை அவை அழிவதற்கு முன்னர், சிதைவதற்கு முன்னர் முதலில் மின் பதிப்புகளாகக் கொண்டுவந்துவிட வேண்டும். மினபதிப்பாக இவை மாறிய பின்னர் அடுத்த படி நிலையில் உள்ள காரியங்களைத் தடையின்றிச் செய்ய முடியும்.

## வினாக்கள் 1-10 : பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. தமிழ் மரபு அறக்கட்டளை பதிவுசெய்யப்பட்ட இடம்.

    (a) ஜேர்மனி
    (b) இங்கிலாந்து
    (c) மேற்கூறிய இரண்டும்
    (d) இணையம்

2. தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்பது.

    (a) தனியார் அமைப்பு
    (b) இலாப நோக்கற்ற அமைப்பு
    (c) அரசு ஆதரவிலான அமைப்பு
    (d) இவை எல்லாம் சரி.

3. தமிழ் மரபு அறக்கட்டளையின் நோக்கம்:

    (a) பதிப்பிக்கப்படாத ஓலைச்சுவடிகளை மின்பதிப்பாக்குவது.
    (b) பதிப்பிக்கப்படாத ஓலைசுவடிகளை நூற்பதிப்பாக்குவது.
    (c) ஓலைச்சுவடிகளை அப்படியே பாதுகாப்பது.
    (d) பதிப்பிக்கப்பட்ட நூல்களைப் பாதுகாப்பது.

4. இன்னமும் பதிப்பிக்கப்படாத ஓலைச்சுவடிகளில் அடங்குவன.

(a) மருத்துவ நூல்கள், வான சாஸ்திரம் மற்றும் நாவாய் சாஸ்திரம்
(b) கோயில் கட்டுமான சாஸ்திரம், கணிதம் மற்றும் இலக்கியம்
(c) இரசவாதம் மற்றும் யோகசாஸ்திரம்
(d) இவை எல்லாம்.

5. ஓலைச்சுவடிகள் பாதுகாப்பதில் முன்னணியில் நிற்கும் நாடுகள்.

(a) ஐரோப்பிய நாடுகள்
(b) பசுபிக் நாடுகள்
(c) ஆசிய நாடுகள்
(d) தமிழ் நாடு

6. தமிழ் நாட்டில் சுவடிப் பாதுகாப்பில் அதிக அக்கறைகொள்வோர்.

(a) பல்கலைக்கழகங்கள்
(b) பாடசாலைகள்
(c) தனியார்
(d) இவர்கள் எல்லோரும்.

7. அண்மையில் ஜெர்மனியில் கோலேன் நகரில் இடிந்து விழுந்த நகர ஆவண நிலையத்தைப் பற்றிய செய்திகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த ஆவணங்கள் வேறோர் ஆவணப் பாதுகாப்பு நிலையத்தில் மின்பதிப்புகளாக வைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய செய்தியிலிருந்து சுபாஷினி சொல்ல விரும்பியது:

(a) இது ஒரு பெருமைப்படத்தக்க விடயம்.
(b) ஆவணங்களின் பிரதிகளை வேறோர் ஆவணக்காப்பகத்திலும் வைப்பதன் அவசியம்.
(c) ஆவணங்களை மின்பதிப்பாக்குவதின் அவசியம்.
(d) ஆவணங்கள் வேறோர் நகரில் கிடைத்தன.

8. ஓலைச்சுவடிகளைக் பாதுகாக்கும் முறையின் படிநிலைகளில் முதன்மையானது.

(a) ஓலைசுவடிகளை தக்காரைக் கொண்டு வாசிப்பது.
(b) ஓலைச்சுவடிகளை மின்பதிப்பாக்கம் செய்வது.
(c) ஓலைச்சுவடிகளை தரம்பிரிப்பது.
(d) ஓலைச்சுவடிகளை தேடி எடுப்பது.

9. மின்பதிப்புக்கும் நூற்பதிப்புக்கும் உள்ள வித்தியாசம்.

(a) நூற்பதிப்புகள் இலகுவில் கிடைக்காது ஆனால் மின்பதிப்புகள் இலகுவில் கிடைக்கும்.
(b) மின்பதிப்புகள் கணினிமூலம் செய்யப்படும். நூற்பதிப்புகள் செய்ய கணினி பயன்படாது.
(c) நூற்பதிப்புகள் நூலகங்களிலும் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும். மின்பதிப்புகள் இணையம் வழி கிடைக்கும்.
(d) இவை எதுவும் சரியல்ல.

10. சுபாவுடன் இ-நேர்காணல் என்பதில் இ-நேர்காணல் என்பது.

(a) இரகசியமான நேர்காணல்
(b) இந்தியாவில் நேரடியாகச் சந்தித்து பேட்டி காணல்
(c) இணையம் ஊடாக நேர்காணல்
(d) இவை எல்லாம் சரியானவை.

**வினாக்கள் 11 – 15 : பின்வரும் கூற்றுகளில் உள்ள இடைவெளிகளுக்கு மிகச்சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

11. பிளமிங்ரன் சந்தையில் அம்மா வாங்கி வந்த ________________ சுவையாக இருந்தது.

(a) மாம்பலம்
(b) மாம்பளம்
(c) மாம்பழம்
(d) மாம்பழாம்

12. ஒரு மனிதனுக்கு ______________________ ஏற்பட்டால் அது அவனுக்கு அழிவுகாலம் தோன்றிவிட்டது என்பதற்கு அறிகுறியாகும்.

(a) ஆனவம்
(b) ஆணவம்
(c) ஆநவம்
(d) ஆனாவம்

13. தமிழ்ப் பாடசாலைகளில் இப்போது _____________________ பரீட்சை நடைபெறுகிறது.

(a) ஆண்டிறுதி
(b) ஆண்டுறிதி
(c) ஆண்டிறிதி
(d) ஆண்டு இறிதி

14. மைதானத்தில் சிறுவர்கள் பந்து _________________________.

(a) விலையாடினார்கள்
(b) விழையாடினார்கள்
(c) விளையாடினார்கள்
(d) விளையாட்டினார்கள்

15. வீழ்ந்த மரத்தை வாளால் ________________________ .

(a) அறிந்தான்
(b) அரிந்தான்
(c) அறுந்தான்
(d) அரித்தான்

**மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்கள் இணைய வலைப்பூவில் எழுதிய மடலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன. இவ்வுரைப்பகுதியை வாசித்து 16-20 வினாக்களுக்கு விடை தருக.**

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர் தொகையைக் கணக்கெடுக்க, உங்கள் பங்களிப்பைக் கோருகிறோம். நீங்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டில் எத்தனை பேர் வாழ்கிறீர்கள் என்பதை அடிக்கடி உங்களுக்குள்ளேயே உசாவுவீர்கள். இந்தக் கணிப்பு அந்தந்த நாடுகளில் வாழும் தமிழரின் குரலோசைக்கு வலிமை தருவதாகும்.

தேசிய மொழிகள் நான்கனுள் ஒன்றாக, தமிழும் சிங்கப்பூரில் இருப்பதற்கு, அந்நாட்டு மக்கள் தொகையுள் 7மூ தமிழராக இருப்பதும் ஒரு காரணம்.
மொரிசியசில் நாணயத் தாள்களில் தமிழ் வரிகள் உள்ளன எனில் அங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 10மூ தமிழராக இருப்பதும் காரணம்.
அண்மையில் ஜனனி ஜனநாயகம் என்ற இளந்தமிழ்ப் பெண் இலண்டன் பெருநகரத்திலிருந்து தமிழர் வாக்குகளை நம்பி, ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டார். ஆஸ்திரேலியாவின் சிட்னி பெருநகருக்குட்பட்ட இரு நகராட்சிகளில் தகவல்கள் தமிழிலும் அச்சிட்டு வழங்குமளவுக்கு அப்பிரதேசங்களில் கணிசமான தொகையினராகத் தமிழர் வாழ்கின்றனர்.

இவ்வேளையில் எந்தெந்த நாட்டில் எவ்வெவ்வளவு தமிழர் வாழ்கின்றனர் என்ற மதிப்பீடு, உலக வளர்ச்சியில் தமிழரின் பங்களிப்பை மதிப்பிட உதவும்.

உலகில் 235 ஆட்சிப் புலங்கள் இருக்கின்றன. இந்த 235 ஆட்சிப் புலங்களிலும் தமிழ் மரபு பேணுவோர் எத்தனை ஆட்சிப் புலங்களில் வாழ்கின்றனர்? ஒவ்வொரு நாட்டிலும் எத்தனை பேர் வாழ்கின்றனர்? தோராயமாகவாவது கணக்கு உண்டா? இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் வாழும் தமிழர் தொகை பற்றிய கணக்கு எவரிடமும் உண்டா?

ஆக 153 புலங்கள் மற்றும் நாடுகளில் வாழும் 93,805,905 தமிழர் பற்றிய பட்டியலை நான் தயாரித்துள்ளேன்.

இப்பட்டியல் தவறுகள் நிறைந்த பட்டியல் என்பதை முன்கூட்டியே தெரிவித்து, தவறுகளைத் திருத்த முன்வருமாறு உங்கள் அனைவரையும் கேட்கிறேன்.
இவ்வாறு அவர் மடலில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி வேண்டுகோளை கேட்டவுடன் அவுஸ்திரேலியாவின் தமிழர் தொகை பற்றி எண்ணத்தோன்றுகின்றது அல்லவா? சரி. இங்கு வாழும் தமிழர் தொகை எவ்வளவு? இரண்டாயிரத்தோராம் ஆண்டின் குடிசனக் கணக்கெடுப்பின்படி அவுஸ்திரேலியாவில் அண்ணளவாக பன்னீராயிரம் ஆண்களும் அதேயளவு பெண்களும் தமிழர்கள் என தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டில் மொத்தத் தமிழர் தொகை ஏறத்தாள நாற்பதினாயிரம் என்கின்றனர். தற்போதய தமிழ் அவுஸ்திரேலியர் தொகையினை யாராலும் திட்டவட்டமாக்க் கூறமுடியாமல் இருக்கிறது. ஒரு சிலர் தமிழர் தொகை தொண்ணூறாயிரத்தை எட்டும் என்னும் அதேவேளை வேறு சிலரோ அது இன்னமும் ஐம்பதாயிரத்துக்குக் கீழே தான் என அடித்துச்சொல்கின்றனர். இப்படிச் சொல்பவர்கள் யாரிடமும் எந்தவித நம்பத் தகுந்த ஆதாரங்களும் இல்லை என்பதே உண்மை. அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர் தொகை தொடர்பான சரியான எண்ணிக்கையை அவுஸ்திரேலிய புள்ளிவிபரவியல் துறையின் மதிப்பீடுகள் மூலமோ அல்லது வேறுவகையிலோ அண்ணளவாகவேனும் மதிப்பிட முடியுமாயின் அது உண்மையிலேயே தமிழர்களின் குரலுக்கு வலு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

## வினாக்கள் 16-20 : மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

16. நாம் வாழும் நாடுகளில் உள்ள தமிழர்களின் உண்மையான கணக்கெடுப்பை செய்யவேண்டும் ஏனெனில்:

(a) அப்புள்ளிவிபரம் அவுஸ்திரேலிய அரசின் வலவு செலவுத் திட்டத்திற்கு உதவும்.
(b) அங்கு வாழும் மக்களின் குரலோசைக்கு வலு சேர்க்கும்.
(c) இலங்கை இந்திய அரசுகளுக்கு உதவும்.
(d) மேற்கூறிய எதுவும் சரியல்ல.

17. பின்வரும் கூற்றுக்களை வாசியுங்கள்:

1. சிங்கப்பூரின் தேசிய மொழிகள் நான்கினுள் தமிழும் ஒன்று
2. மொரீசியஸ் தீவில் தமிழர் தொகை பத்துவீத்த்திற்கு மேலானபோதிலும் அங்கு தமிழுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை.
3. ஜனனி ஜனநாயகம். இலண்டன் பெருநகரத்திலிருந்து ஐரோப்பிய பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்டார்.

மேற்படி கூற்றுகளுள்

(a) 1 மட்டும் சரியானது
(b) 1 ம் 2ம் சரியானவை
(c) 3 மட்டும் சரியானது
(d) இவை எல்லாமெ சரியானவை.

18. உரைப்பகுயில் கூறப்பட்டபடி உலகத் தமிழரின் எண்ணிக்கை அண்ணளவாக

(a) ஒன்பது கோடியே முப்பத்தெட்டு இலட்சம்
(b) தொண்ணூற்று மூன்று இலட்சம்
(c) தொண்ணூற்றி மூன்று கோடி
(d) இவை எதுவும் சரியல்ல.

19. பின்வருவனவற்றுள் மிகப் பொருத்தமான கூற்று:

(a) 2001ஆம் ஆண்டில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களின் எண்ணிக்கையை விட அதிகம்.
(b) தற்போதய தமிழர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டும்.
(c) தற்போதய தமிழர்களின் எண்ணிக்கை எண்பதாயிரத்தைத் தாண்டும்.
(d) அவுஸ்திரேலியாவில் தமிழர் எண்ணிக்கை பற்றி திட்டவட்டமாக எதுவும் கூறமுடியாது.

20. தோராயமாக என்பதன் பொருள்

(a) துல்லியமாக
(b) அண்ணளவாக
(c) இவை இரண்டும் சரி
(d) இவை எதுவும் சரியல்ல.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 21 - 23 : பின்வரும் கூற்றுகளில் உள்ள இடைவெளிகளுக்கு மிகப்பொருத்தமான இணைப்புச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | |
|---|---|
| (a) மேலும் | (c) ஆனால் |
| (b) ஏற்கனவே | (d) ஏனென்றால் |

21. கமலன் பல்கலைக்கழகத்தில் படிக்கிறான். ______________________________ பகுதி நேர வேலையும் செய்கின்றான்.

22. எழிலியின் இயற்கையான அழகிற்கு ஒப்பனை ______________________________ அழகூட்டியது.

23. ஓட்டப்போட்டியில் கண்ணன் முதலாவதாக வந்தான். ______________________________ அவன் ஒழுங்காகப் பயிற்சிசெய்தான்.

**வினாக்கள் 24 - 25 : பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து வாக்கித்தைப் பூரணப்படுத்துக.**

| | |
|---|---|
| (a) அத்துடன் | (c) ஏனென்றால் |
| (b) இருந்தாலும் | (d) ஏற்கனவே |

24. பரீட்சைக்கு முந்திய நாட்களில் பவித்திராவுக்கு சுகயீனம் வந்தாலும் ______________ நன்றாகப் படித்திருந்தமையால் பரீட்சை இலகுவாக இருந்தது.

25. துரியோதனன் பலசாலி. ______________________________ அவனால் வீமனை வெல்ல முடியவில்லை.

**வினாக்கள் 26 - 30 : பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

26. சங்க இலக்கியங்கள் என்று நாம் பொதுவாக அழைப்பது.

(a) காப்பியங்கள்
(b) பழம் தமிழ் இலக்கியங்கள்
(c) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்
(d) இவை எல்லாம்

27. திருக்குறளுக்கு உரைசெய்தவர்களுள் காலத்தால் முந்தியவர்.

(a) முனைவர் மு.வ
(b) பேராசிரியர் சாலமன் பாப்பையா
(c) பரிமேலழகர்
(d) இவர்கள் எல்லோரும்.

28. காப்பியங்களுள் அடங்காதது.

(a) கம்பராமாயணம்
(b) மணிமேகலை
(c) திருக்குறள்
(d) வளையாபதி

29. வாழ்க்கை விளக்கங்கள் அனைத்தையும் அடக்கிய ஒரு நூல் என்று சிறப்பிக்கப்படுவது.

(a) கம்பராமாயணம்
(b) மகாபாரதம்
(c) சிலப்பதிகாரம்
(d) திருக்குறள்

30. பாலை நிலம் என்பது.

(a) மலையும் மலைசார்ந்த இடமும்
(b) காடும் காடு சார்ந்த இடமும்
(c) கடலும் கடல்சார்ந்த இடமும்
(d) இவை எதுவுமல்ல.

**வினாக்கள் 31 - 35 : பின்வரும் பாடலடிகளுக்குப் பொருத்தமான புலவரைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | |
|---|---|
| (a) பாரதியார் | (c) திருவள்ளுவர் |
| (b) இளங்கோ அடிகள் | (d) கணியன் பூங்குன்றனார் |

31. தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்.

32. தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக் கண்ணீராற் காத்தோம்.

33. யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தர வரா.

34. அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே.

35. எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு.

**வினாக்கள் 36 - 40 : மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | |
|---|---|
| (a) அப்துல்கலாம் | (c) வெங்கடராமன் ராமகிருஸ்ணன் |
| (b) ஏ. ஆர். இரகுமான் | (d) அண்ணாதுரை |

36. எல்லாப் புகழும் இறைவனுக்கே என விருது வழங்கும் விழாவில் தமிழில் பேசியவர்.

37. இந்த ஆண்டின் நோபல் பரிசு பெற்ற தமிழர்.

38. சந்திராயன் விண்கலத்தினை உருவாக்கியவருள் முதன்மையானவர்.

39. குடியரசுத் தலைவராக விளங்கிய அணுவிஞ்ஞானி.

40. இசைப்புயல் எனும் பட்டம் பெற்ற திரைத்துறைப் பிரபலம்.

**வினாக்கள் 41 - 43 : பொருத்தமான விடையைத் தேர்தெடுக்கவும்.**

41. இரயில் வண்டிக்கு தற்காலத்தில் வழங்கும் புதிய தமிழ்ச் சொல்.

(a) பேருந்து
(b) தொடருந்து
(c) மகிழுந்து
(d) இவை எல்லாமே.

42. பஸ் வண்டிக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்.

(a) பேருந்து
(b) மகிழுந்து
(c) உந்துருளி
(d) இவை எதுவுமில்லை.

43. புலம்பெயர் தமிழர் என்பதில் வரும் புலம் என்பது.

(a) சொந்தம்
(b) நிலம்
(c) தற்போது வாழும் நாடு
(d) இவை எதுவுமல்ல.

**வினாக்கள் 44 - 45 : ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைத் தெரிவுசெய்க.**

| | |
|---|---|
| (a) வருடி | (c) தொலைநகல் |
| (b) எழுத்துரு | (d) தரவிறக்கம் |

44. Fax

45. Scanner

**வினாக்கள் 46 - 50 : பின்வரும் உரைப்பகுதியில் காணப்படும் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை அவற்றிற்குரிய இலக்கங்களுக்கு எதிரே உள்ள கூட்டில் எழுதவும்.**

இப்போது வவுனியாவிலிருந்து வந்திருக்கும் 57 மாணவர்களும் கல்வியைத் தொடருவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தாலும் அவர்கள் சந்திக்கின்ற (46)____________________ ஏராளம். முதலில் பலர் போர்க்காயங்களுக்கு உள்ளானவர்களாக இருக்கிறார்கள். இந்தக் காயங்கள் இரண்டு வகை. ஒன்று உடற்காயம், இரண்டாவது (47)____________________ . குறிப்பாக மருத்துவ பீடத்துக்குரிய மாணவர் ஒருவர் இரண்டு கால்களுமே இல்லாதிருக்கின்றார். வேறொரு மாணவர் நடக்க முடியாத நிலையிலிருக்கின்றார். இன்னொருவருக்கு குடும்பத்தில் யாருமே மிஞ்சவில்லை. எல்லோரையும் போர் தின்றுவிட்டது. சித்தங்கலங்கிய நிலையில் வேறுசிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இத்தகைய கடினமான நிலையிலேயே இவர்கள் தமது கல்வியைத் தொடரவுள்ளனர். போரில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட இவர்கள், பின்னர் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். போர் எல்லாவற்றையும் ஏற்கனவே தின்றுவிட்டது. எனவே, வெறும் நடைப் (48)________________ ஆக்கப்பட்டுள்ள இவர்கள் (49)_______________________ தொடர்வதற்கு பொருளாதார வசதிகள் இல்லை. போதிய உடைகள் இல்லை. உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான வசதிகள் இல்லை என்ற நிலையில் இருக்கின்றார்கள். பல்கலைக்கழக நிர்வாகம் இவர்களுக்கான உதவிகளுக்காக ”முதலுதவி” என்ற அளவில் சிறு உதவியை மட்டுமே அளிக்கும் நிலையில் உள்ளது. ஆனால், இவர்களின் தேவையோ பெரியது. நிலைமையோ மிகவும் (50)________________. எனவே, இவர்களுக்கான உதவிகள் அதிகளவில் தேவைப்படுகின்றன.

## வினாக்கள் 51 - 60 : ஆக்கத்திறன் வினா

இந்தோனேசியக் கடற்பரப்பில் நின்றுகொண்டிருக்கும் ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருக்கும் 78 இலங்கை அகதிகள் தொடர்பாக நாள் தோறும் நீங்கள் கேள்விப்படும் செய்திகள் உங்களைக் கவலையடைய வைத்துள்ளன. மேலும் சில கப்பல்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்மஸ் தீவிலும் அகதிகள் தடுத்துவைக்கப்ப்டுள்ளனர் என நீங்கள் அறிந்துகொண்டீர்கள். கடந்த ஒரு வாரத்தில் நீங்கள் கேள்விப்பட்ட செய்திகள் உங்களை எவ்விதம் பாதித்தன என்பதை நாட்குறிப்புகளாகத் தருக.

(உங்கள் ஆக்கம் குறைந்தது 100 சொற்களில் அமைந்திருக்கவேண்டும்.)